தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com




RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 162 | 4 Pages | 9.1.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 162 | 4 பக்கங்கள் | 9.1.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்**
**பகையும் உளவோ பிற**

**விளக்கம்:**
முகமலர்ச்சியும் அகமலர்ச்சியும் கொல்லுகின்ற சினத்தை விட ஒருவனுக்கு பகையானவை வேறு உள்ளனவோ?

# நெட் தேர்வை வேறு தேதிக்கு மாற்றுக முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜன.9

தைப்பொங்கல் அன்று நடத்தப்படும் யுஜிசி நெட் தேர்வை வேறொரு நாளுக்கு மாற்றி அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது:

இந்த ஆண்டு தமிழ்நாட்டின் மிக முக்கியமானபண்டிகையானபொங்கல் பண்டிகை ஜனவரி 14 அன்று கொண்டாடப்படுகிறது என்றும் இந்தப் பண்டிகை தமிழ்நாட்டின் மிக முக்கியமான பண்டிகை என்றும், தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்துக்தரப்பினராலும்அறுவடைத்திருவிழாவாகக்கொண்டாடப்படுகிறது என்றும் தமிழ்நாட்டின் உயர்கல்வித்துறை அமைச்சர் 23.12.2024 அன்று மத்திய கல்வி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டிய முதலமைச்சர் ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பண்டிகை ஜனவரி 13 முதல் ஜனவரி 16 வரை நான்கு நாட்கள் கொண்டாடப்படுவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொங்கல் பண்டிகையை அனைத்து தமிழ்ச் சமூகத்தினரும் நான்கு நாட்கள் உற்சாகமாக கொண்டாடுவர் என்றும் எனவே, இந்தப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 2025 ஜனவரி 14 முதல் 17 வரை அரசு விடுமுறை நாட்களாக தமிழ்நாடு அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.




தமிழ்நாட்டில் அறுவடைத் திருவிழாவாக கொண்டாடப்படும் பொங்கல், ஒரு பண்டிகையாக மட்டுமல்லாது ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைக் காட்டுவதாகவும், இந்தப் பொங்கல் பண்டிகையைப் போலவே, ஆந்திரா மற்றும் தெலுங்கான மாநிலங்களில் மகர சங்கராந்தி பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, திட்டமிட்டபடி பொங்கல் விடுமுறையில் யுஜிசிநெட் தேர்வை நடத்தினால், ஏராளமான தேர்வர்கள்சிரமத்திற்கு ஆளாக நேரிடும் என்றும் இதே காரணத்திற்காக ஜனவரி 2025இல் நடைபெறவிருந்த பட்டயக் கணக்காளர்கள் தேர்வு ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, யுஜிசிநெட் தேர்வுகள் மற்றும் பிற தேர்வுகளை வேறொரு பொருத்தமான நாட்களில் மாற்றியமைக்க தேவை உள்ளது என்று தாம் கருதுவதாகவும். அறுவடைத் திருவிழா கொண்டாடப்படும் தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களின் மாணவர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் தேர்வுகளுக்கு எளிதில் வர இயலும் என்றும் முந்தைய ஆண்டுகளில் பொங்கல் பண்டிகை காலங்களில் தேசிய தேர்வு முகமை யுஜிசிநெட் தேர்வை நடத்தவில்லை என்று தரவுகள் காட்டுகிறது என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, இத்தகைய சூழ்நிலையில், யுஜிசிநெட் தேர்வுகள் மற்றும் பிற தேர்வுகளை ஜனவரி 13 முதல் 16 வரையிலான நாட்களில் நடத்துவதைத் தவிர்த்து பொருத்தமான வேறு நாட்களுக்கு மாற்றியமைக்குமாறும்

இதுகுறித்து மத்திய கல்வி அமைச்சர் தலையிட்டு தமிழ்நாட்டில் மற்றும் மாநிலங்களில் அறுவடைத் திருவிழா கொண்டாடப்படும் காலங்களில் யுஜிசிநெட் தேர்வுகள் நடத்தும் திட்டத்தை மாற்றியமைக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

# அமெரிக்கா: பகவத் கீதை மீது பதவி பிரமாணம் எடுத்து கொண்ட சுஹாஷ் சுப்ரமணியம்



வாஷிங்டன், ஜன.9

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடந்த நவம்பர் 5ந்தேதி நடந்து முடிந்தது. இதில், பெரும்பான்மையான இடங்களில் முன்னாள் ஜனாதிபதி டிரம்ப் சார்ந்த குடியரசு கட்சி கைப்பற்றியது. டிரம்ப் வருகிற 20ந்தேதி அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்க இருக்கிறார்.

இந்நிலையில், அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு, உறுப்பினர்கள் பதவி பிரமாணம் எடுத்து கொள்ளும் நிகழ்ச்சியும் நடந்து வருகிறது. இதில், கிழக்கு கடற்கரையில் இருந்து சென்று பகவத் கீதை மீது பதவி பிரமாணம் எடுத்த முதல் இந்தியஅமெரிக்க பிரதிநிதி என்ற பெருமையை சுஹாஷ் சுப்ரமணியம் பெற்றுள்ளார்.

இதனை காண்பதற்காக அவருடைய தாயார் நேரில் சென்றார். இதுபற்றி சுப்ரமணியம் கூறும்போது, அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு விர்ஜீனியாவில் இருந்து உறுப்பினராக பதவி பிரமாணம் எடுத்து கொண்ட முதல் இந்தியஅமெரிக்க பிரதிநிதி மற்றும் தெற்காசிய உறுப்பினராக என்னுடைய தாயார் பெருமை பொங்க என்னை பார்த்தார்.

உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட தகவலை தாயாரிடம் முதலில் தெரிவிக்கும்போது, நம்ப முடியாதவராக அவர் காணப்பட்டார். ஆனால், விர்ஜீனியாவின் முதல் உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளேன். இது நிச்சயம் கடைசி அல்ல. இதற்காக நான் அதிக பெருமை கொள்கிறேன் என சுப்ரமணியம் கூறினார்.

இவருக்கு முன் துளசி கப்பார்டு (வயது 43), ஹவாய் பகுதியில் இருந்து அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராக பகவத் கீதை மீது பதவி பிரமாணம் எடுத்த முதல் இந்து அமெரிக்கராக உள்ளார். சிறு வயதிலேயே இந்து மதத்திற்கு மாறிய கப்பார்டு, அமெரிக்காவின் சக்தி வாய்ந்த தேசிய புலனாய்வு துறையின் இயக்குநராக நியமிக்கப்பட்டு உள்ளார்.

119வது அமெரிக்க நாடாளுமன்றத்தில் தற்போது 4 இந்து உறுப்பினர்கள் உள்ளனர். ராஜா கிருஷ்ணமூர்த்தி, ரோ கன்னா மற்றும் ஸ்ரீ தனேதார் ஆகியோருடன் சுப்ரமணியமும் இந்த வரிசையில் இணைந்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் இந்து மற்றும் முஸ்லிம் மதத்தினர் 3வது பெரிய மத குழுவாக உள்ளனர். முதல் இடத்தில் கிறிஸ்தவர்கள் (461 பேர்), 2வது இடத்தில் யூதர்கள் (32 பேர்) உள்ளனர். 3 புத்த மத உறுப்பினர்களும் உள்ளனர்.

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு முன்கூட்டியே வரவு வைக்கப்படும் மகளிர் உரிமைத்தொகை

சென்னை, ஜன.9

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், பண்டிகையை கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வருகின்றனர். பொங்கல் பண்டிகைக்கு தமிழக அரசு மொத்தமுள்ள 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 ரேஷன் கார்டுதாரர்களுக்கும் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு கரும்பு மட்டுமே வழங்கப்படும் என அறிவித்து விட்டது. இந்த தொகுப்புடன் ரூ.1,000 வழங்க வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சியினரும் கோரிக்கை வைத்துள்ளனர். இந்த



விவகாரத்தில் திடீர் அறிவிப்பு வரலாம் என்ற எதிர்பார்ப்பும் இருக்கிறது.

இதற்கிடையில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 10ந்தேதியே ரூ.1,000 வரவு வைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது மகளிர் உரிமைத்தொகை ஒவ்வொரு மாதமும் 15ந்தேதி பெண்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. ஆனால் இந்த மாதம் வருகிற 14ந்தேதி முதல் 19ந்தேதி வரை தொடர் பொங்கல் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 11ந்தேதி மாதத்தின் 2வது சனிக்கிழமை என்பதால் வங்கிகளுக்கு விடுமுறை. 12ந்தேதி ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை. 13ந்தேதி ஒரு நாள் மட்டுமே உள்ளது. அது பொங்கலுக்கு முந்தைய தினம்.

எனவே தமிழக அரசு, மகளிர் உரிமைத்தொகையை 10ந்தேதி வழங்கி விடலாம் என முடிவு எடுத்துள்ளது. அதன்படி மகளிர் உரிமைத்தொகை பெறுபவர்களுக்கு, இந்த மாதம் 10ந்தேதி (வெள்ளிக்கிழமை) அவர்களது வங்கி கணக்கில் ரூ.1,000 பணம் வரவு வைக்கப்படுகிறது.

# 20ம் தேதிக்குள் பணய கைதிகளை விடுதலை செய்யவில்லையென்றால்: ஹமாசுக்கு டிரம்ப் கெடு



வாஷிங்டன், ஜன9

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 பேர் உயிரிழந்தனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை காசா முனைக்கு பணய கைதிகளாக ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டது.

அதேபோல், ஹமாஸ் ஆயுதக்குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், 101 இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதில், 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியாகியிருந்தது.

அதேவேளை, ஓராண்டை கடந்தும் இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போர் நீடித்து வருகிறது. இந்த போரில் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். போரை நிறுத்தவும், பணய கைதிகளை மீட்கவும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. கத்தாரில் இஸ்ரேல், ஹமாஸ் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இதனிடையே, அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் 20ம் தேதி பதவியேற்க உள்ளார். அவர் அதிபராக பதவியேற்கும்முன் இஸ்ரேல் , ஹமாஸ் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு பணய கைதிகள் மீட்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், 20ம் தேதிக்குள் பணய கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டுமென ஹமாசுக்கு டிரம்ப் கெடு விதித்துள்ளார்.

இது தொடர்பாக டொனால்டு டிரம்ப் கூறுகையில், 20ம் தேதி நான் பதவியேற்கும்முன் ஹமாஸ் பணய கைதிகளை விடுதலை செய்யவேண்டும். பேச்சுவார்த்தை தொடர்பாக நான் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவிரும்பவில்லை. ஆனால் பணய கைதிகள் விடுதலை செய்யப்படவில்லையென்றால் மத்திய கிழக்கில் நரகம் வெடிக்கும்' என்றார்.

# ஈரோடு இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி போட்டி: சீமான் அறிவிப்பு வெளியீடு

கள்ளக்குறிச்சி, ஜன.9

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழக சட்டப்பேரவையில் வெளியேறிய கவர்னரின் செயல் கண்டிக்கத்தக்கதாகும். தமிழ்த்தாய் வாழ்த்துதான் முதலில் ஒலிக்கப்படும் என்பதும், இறுதியாகத்தான் தேசியகீதம் ஒலிக்கப்படவேண்டும் என்பதும் தமிழ்நாட்டில் நடைபெறும் ஒரு நிகழ்வாகும். அதை மாற்றியமைக்க கவர்னர் முயற்சி செய்வது தமிழ் இனத்தை அவமதிப்பதாக கருதப்படுகிறது. இதை தி.மு.க. தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து வருகிறது.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் துன்புறுத்தலை கண்டித்து, நாம் தமிழர் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் செய்தபோது, அனுமதியும், போராட இடமும் தரவில்லை. தடையை மீறியதால் எங்களை கைது செய்தனர். ஆனால், தி.மு.க. தன் அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இது தான் தமிழ்நாட்டில் தி.மு.க. கடைப்பிடிக்கக்கூடிய ஜனநாயகம்.



கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தில் அரசு பணத்தை வைத்து மூடி விட்டது. டங்ஸ்டன் சுரங்கத்தை நாம் தமிழர் கட்சி இருக்கும் வரை எந்த கொம்பன் வந்தாலும் அந்த இடத்தில் ஒரு கல்லைக்கூட புரட்டிப்போட முடியாது. தமிழ் மண்ணின் வளத்தை காக்க மட்டுமே நாம் தமிழர் கட்சி இருக்கும். நிலத்தின் வளத்தை கெடுக்கும் எந்த ஒரு திட்டத்தையும் மண்ணில் வர விட மாட்டேன். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள ஈரோடு இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினர் மீது வழக்கு

சென்னை, ஜன.9

சட்டசபை உரையை புறக்கணித்த கவர்னர் ஆர்.என்.ரவியை ஜனாதிபதி திரும்ப பெற வலியுறுத்தியும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் திமுக சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, தமிழகம் முழுவதும் மாவட்டத்தலைநகரங்களில் இன்று திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே ஆர்பாட்டம் நடைபெற்றது. இதில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி., எம்.பி.,க்கள் தயாநிதி மாறன், கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் தென் சென்னை, வட சென்னை மற்றும் மத்திய சென்னைமாவட்டதிமுகநிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



இந்த நிலையில், சென்னையில் அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினர் 3,000 பேர்மீது சைதாப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அனுமதியின்றி கூடுதல் உள்பட 2 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# திருவள்ளுவர் சிலைக்கு படகு போக்குவரத்து நிறுத்தம்



கன்னியாகுமரி, ஜன.9

கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும், அதன் அருகில் உள்ள மற்றொரு பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையும் எழுப்பப்பட்டு உள்ளது. இவற்றை தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் படகில் சென்று பார்த்து வருகிறார்கள்.

இவற்றை பார்வையிட செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக தமிழக அரசு நிறுவனமான பூம்புகார்கப்பல் போக்குவரத்து கழகம் படகு போக்குவரத்து நடத்தி வருகிறது. இதற்காக பொதிகை, குகன், விவேகானந்தா ஆகிய 3 படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

கடல் சீற்றம், கடல் நீர் மட்டம் தாழ்வு மற்றும் கடல் நீர்மட்டம் உயர்வு போன்ற இயற்கை மாற்றங்களின் காரணமாக திருவள்ளுவர் சிலைக்கு அடிக்கடி படகு போக்குவரத்து ரத்து செய்யப்பட்டு வந்தது. இதனால் சுற்றுலா பயணிகள் திருவள்ளுவர் சிலையை படகில் சென்று நேரில் பார்க்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்ற நிலைமை இருந்து வந்தது.

இதைத்தொடர்ந்து தமிழக அரசு நெடுஞ்சாலை துறை மூலம் விவேகானந்தர் பாறைக்கும், திருவள்ளுவர் சிலைக்கும் இடையே ரூ.37கோடி செலவில் கண்ணாடி இழை கூண்டு பாலத்தை அமைத்துள்ளது. இந்த கண்ணாடி பாலத்தை கடந்த மாதம் 30ந்தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதைத்தொடர்ந்து கடந்த 4ந்தேதி முதல் இந்த பாலம் வழியாக சுற்றுலா பயணிகள் நடந்து சென்று திருவள்ளுவர் சிலையை பார்க்க அனுமதிக்கப்பட்டனர். இதைத்தொடர்ந்து திருவள்ளுவர் சிலைக்கு தற்போது படகு போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகுதுறையில் இருந்து சுற்றுலா பயணிகளை ஏற்றிச்செல்லும் படகு விவேகானந்தர் பாறையில் சுற்றுலா பயணிகளை இறக்கி விட்டு விட்டு அங்கிருந்து சுற்றுலா பயணிகளை ஏற்றிக் கொண்டு கரைக்கு திரும்பி வந்து விடுகிறது. விவேகானந்தர் மண்டபத்தை பார்வையிட்ட பிறகு சுற்றுலா பயணிகள் கண்ணாடி பாலம் வழியாக நடந்து சென்று திருவள்ளுவர் சிலையை பார்வையிடுகிறார்கள். அதன்பிறகு அவர்கள் அதே பாலம் வழியாக விவேகானந்தர் பாறைக்கு வந்து அங்கிருந்து படகு மூலம் கரைக்கு திரும்புகிறார்கள்.

கண்ணாடி பாலம் திறக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து திருவள்ளூர் சிலைக்கு படகில் சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் திருவள்ளுவர் சிலைக்கு தற்காலிகமாக படகு போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

# கே.வி.தங்கபாலுக்கு பெருந்தலைவர் காமராஜர் விருது: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்

சென்னை, ஜன.9

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில்,

பெருந்தலைவர் காமராசர் விருது 2006ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு, அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினராகவும், தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவராகவும், தமிழக காங்கிரஸ் கட்சிப் பொதுச்செயலாளராகவும், கட்சித் தலைவராகவும் மத்திய இணை அமைச்சராகவும், ஒரு முறை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும், இருமுறை பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியதோடு கடந்த 50 ஆண்டு காலமாக பொது வாழ்க்கையில் ஈடுபட்டுவரும்



கே.வி.தங்கபாலு தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் இரண்டு லட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்படும். இவ்விருது முதலமைச்சரால் திருவள்ளுவர் திருநாளான 15.1.2025 அன்று சென்னையில் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளார்.

# அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தை மறைக்கவே போராட்டம் நடத்துகின்றனர்: தமிழிசை சவுந்தரராஜன்

கோவை, ஜன.9

பா.ஜ.க மாநில முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கோவை விமான நிலையத்தில் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது:

தேசிய கீதத்துக்கு மரியாதை கொடுக்க சொன்னால், கவர்னர் பிரிவினை வாதம் பேசுவதாக தி.மு.க.வினர் சொல்கிறார்கள். கவர்னர் தேசிய கீதம் பாட வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தார்.

ஆனால் அதற்கு அனுமதிக்கவில்லை. மாறாக அவருக்கு எதிராக தி.மு.க.வினர் போராட்டம் நடத்தி கொண்டிருக்கின்றனர்.

ஆளுங்கட்சியான தி.மு.க. போராட்டம் செய்வதற்கு அனுமதி இருக்கிறது. ஆனால் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்தால் மட்டும் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்போது இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். இவர்களது ஆர்ப்பாட்டத்தால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படவில்லையா?

கடந்த 10 நாட்களாக தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் போராட்டம் நடத்தினர். அவர்களை எல்லாம் அப்போது கைது செய்தீர்கள்.

இப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ஏன் கைது செய்யவில்லை? இதற்கு தமிழக அரசுபதில் சொல்லவேண்டும். அண்ணா பல்கலைக்கழகம் விவகாரத்தை திசைதிருப்பவும், பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை மறைக்கவே தி.மு.க. இந்த போராட்டத்தை நடத்துகிறது.

முதலமைச்சர், கவர்னர் குறித்து வரம்பு மீறி டுவிட் செய்துள்ளார்.

அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நியாயம்



கிடைக்க வேண்டும். இது குறித்து எதிர்கட்சிகள் கேட்டாலோ அல்லது போராட்டம் நடத்தினாலோ நாங்கள் தான் ஏற்கனவே கைது செய்து விசாரணைநடத்திவருகிறோம். நீங்கள் எதற்காக போராட்டம் நடத்துகிறீர்கள் என கேட்கின்றனர்.

தமிழக அரசு தவறான போக்கில் சென்று கொண்டிருக்கிறது. தமிழகத்தில் எல்லா குரல்வலையும் நசுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தற்போது எமர்ஜென்சியே நடந்து கொண்டிருக்கிறது.

இவ்வளவு நாட்களாக காவியை பார்த்து பயந்த தி.மு.க. தற்போது கருப்பு நிறத்தை பார்த்தும் பயப்பட தொடங்கியது. உடை என்பது அவரவர் தனிப்பட்ட உரிமை. தி.மு.க.வுக்கு எதை பார்த்தாலுமே பயமாக உள்ளது.

தி.மு.க கூட்டணியில் தற்போது குழப்பம் வந்து வெடவெடுத்து போய் இருக்கிறது. அதை மறைக்கவே இதுபோன்ற ஆர்ப்பாட்டங்கள் நடத்துகிறார்கள். இதுவரை பொங்கல் பண்டிகைக்கு கொடுத்து வந்த ரூ.1000த்தை இந்த ஆண்டு கொடுக்கவில்லை. தேர்தல் நெருங்கும் போது பொங்கல் பரிசாக ரூ.1000 வழங்கி விடுவார்கள். இப்போது கொடுத்தால் தேர்தலுக்குள் சூரியனை மறந்து விடுவார்கள் என்பதால் இப்போது கொடுக்கவில்லை.

2026 சட்டசபை தேர்தலில் தி.மு.க.வுக்கு பெரிய அடி கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தி.மு.க. போராட்டத்திற்கு ஒரே நாளில் அனுமதி? நடவடிக்கை கோரி முறையீடு : வழக்கு தாக்கல் செய்ய நீதிபதி அறிவுறுத்தல்



சென்னை, ஜன.9

சென்னை ஐகோர்ட்டில் நீதிபதி பி.வேல்முருகன் இன்று காலையில் வழக்குகளை விசாரிக்க தொடங்கினார்.

அப்போது பா.ம.க.வைச் சேர்ந்த வக்கீல் கே. பாலு ஆஜராகி, அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் சம்பவத்தைகண்டித்துபோராட்டம் நடத்த பாமக மகளிர் அணி சென்னை போலீஸ் கமிஷனரிடம் அனுமதி கேட்டு விண்ணப்பம் செய்தது. ஆனால் 5 நாட்களுக்கு முன்பு விண்ணப்பம் செய்யவில்லை என்று காரணம் கூறி கடைசி நேரத்தில் போலீசார் அனுமதி வழங்க மறுத்து விட்டனர்.

வெளியூரிலிருந்து வந்த பெண்கள் காலையில் போராட்டம் நடத்த முற்பட்டபோது அவர்களை கைது செய்து மாலை 7 மணி வரை திருமண மண்டபத்தில் அடைத்து வைத்து, பின்னர் விடுவித்தனர். ஆனால், நேற்று நடந்த சம்பவம் தொடர்பாக மாநில கவர்னரை கண்டித்து ஆளும்கட்சியான தி.மு.க. இன்று சைதாப்பேட்டையில் போராட்டம் நடத்த போலீஸ் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை ஒரே நாளில் போலீசார் பரிசீலித்து போராட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளனர் . இது குறித்து தகுந்த உத்தரவை இந்த ஐகோர்ட்டு பிறப்பிக்க வேண்டும். எனவே ஒரே நாளில் அனுமதி வழங்கிய போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒருவேளை போலீஸ் அனுமதி இல்லாமல் போராட்டம் நடத்தியிருந்தால், தி.மு.க.வினர் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஐகோர்ட்டு தான் பொது மக்களின் பாதுகாவலர் என்பதால் இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்"என்றுமுறையிட்டார்.

அதற்கு நீதிபதி, "இந்த ஐகோர்ட்டு தான் பொது மக்களின் பாதுகாவலர் அந்த பொறுப்பை நான் உதறித் தள்ள விரும்பவில்லை. இந்த விவகாரம் குறித்து வழக்கு தாக்கல் செய்திருந்தால் அந்த வழக்கை நாளை காலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்கிறேன். அந்த வழக்கை விசாரித்து தகுந்த உத்தரவையும் பிறப்பிக்கின்றேன் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# மக்கள் போராட்டங்களைக் கண்டு நடுங்காதீர்? எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஜன.9

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மதுரை அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து லட்சக்கணக்கான பொதுமக்கள் சார்பில் நடைபெறும் நடைபயணப் போராட்டத்திற்கு காவல்துறை அனுமதியை மறுத்துள்ள ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனம்.

போராட்டம் என்பது மக்களின்அடிப்படைஜனநாயக உரிமை; ஆனால் இங்கு நடக்கும் மு.க.ஸ்டாலின்தலைமையிலான திமுகவின் பாசிச ஆட்சியோ, ஜனநாயகத்தின் உரிமைகளை ஒட்டுமொத்தமாக விழுங்கிவிட்டு, எதிர்க்கட்சிகள், சமூக அமைப்புகள், பொதுமக்கள் என யாரும் எதற்கும் போராடக்கூடாது என்றும், அதையும் மீறி மக்கள் உணர்வுப்பூர்வமாகப் போராடினால், காவல் துறை கொண்டு அடக்குமுறையைக் கையாள்வது என்றும் அவசர நிலை ஆட்சியையே நடத்திவருகிறது.

முறையாக அனுமதி கோரப்பட்டு, மிகவும் அமைதியாக அறவழியில் பொதுமக்கள் நடத்தும் போராட்டத்திற்கு அனுமதி மறுக்கும் ஸ்டாலின் மாடல் அரசு, யாரையோ காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கில், அண்ணா பல்கலை. வளாக பாலியல் வன்கொடுமை வழக்கை திசைதிருப்பும் வகையில் திமுக நேற்று அறிவித்து இன்று நடத்தும் ஒரு நாடகப் போராட்டத்திற்கு அனுமதியை வழங்கியிருப்பது எப்படி? டங்ஸ்டன் சுரங்கத்தை எதிர்ப்பதாக சட்டப்பேரவையில் ஸ்டாலின் மாடல் அரசு நடத்திய தீர்மான நாடகமே அம்பலமாகிவிட்ட நிலையில், தற்போது இந்த போராட்டத் தடை மூலம் திமுக அரசு டங்ஸ்டன் சுரங்கம் அமைய ஆதரவாகவே இருக்கின்றது என்ற உண்மை மக்களிடையே உறுதியாகிவிட்டது. மக்கள் போராட்டங்களைக்கண்டுநடுங்காமல், அவற்றிற்கான உரிய அனுமதிகளை வழங்குமாறு ஸ்டாலின் மாடல் அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர்கூறியுள்ளார்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் கரிவலம் வந்தம் நல்லூர் கிராமம் ராஜபாளையம் ரோடு கவிபரணி மஹாலில் நடைபெற்றமனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ. கே.கமல் கிஷோர் கலந்து கொண்டுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை செய்து வைத்தார்கள்

# ஈரோடு பகுதியில் கவர்னர் ஆர்.என்.ரவியை கண்டித்து ஒட்டப்பட்டுள்ள போஸ்டரால் பரபரப்பு




ஈரோடு, ஜன.9

இந்த ஆண்டுக்கான சட்டமன்ற முதல் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. இந்த நிலையில் சட்டமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்க கவர்னர் ஆர்.என். ரவிக்கு தமிழக அரசு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.

சட்டமன்றத்துக்கு வந்த கவர்னர் ஆர்.என்.ரவி, சட்டமன்றத்தில் முதலில் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை என்று கூறி, சட்டமன்றத்தில் இருந்து வெளியேறினார்.

கவர்னரின் இந்தச் செயல் சட்டப்பேரவையின் மாண்பை அவமதிப்பதாக கூறி தி.மு.க மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர். மேலும், தி.மு.க சார்பில் இன்று தமிழக முழுவதும் கவர்னர் ஆர். என்.ரவிக்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கவர்னர் ஆர்.என்.ரவியை கண்டித்து, ஈரோடு மாநகரில் நகர், பஸ் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகள், பன்னீர்செல்வம் பூங்கா, மீனாட்சிசுந்தரனார்சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கெட்அவுட் ரவி எனும் ஹேஷ்டேக்குடன் "தமிழ் நாட்டில் அத்துமீறும் கவர்னர், அவரை காப்பாற்றும் அ.தி.மு.க பா.ஜ.க.கள்ளக்கூட்டணி" எனும் வாசகங்கள் அச்சிடப்பட்டு, எடப்பாடி பழனிசாமி, அண்ணாமலை, கவர்னர் ஆர்.என்.ரவி ஆகியோரின் கார்டூன் படங்களுடன் எடப்பாடி பழனிசாமிகவர்னர் ஆர். என்.ரவி பேசிக்கொள்வது போல் போஸ்டர்கள் அதிக அளவில் ஒட்டப்பட்டுள்ளது.

# டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதில் நாடகமாடிக் கொண்டிருக்கிறது திமுக அரசு அண்ணாமலை



சென்னை, ஜன.9

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

மதுரை அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதில், ஆரம்பம் முதலே நாடகமாடிக் கொண்டிருக்கிறது திமுக அரசு. டங்ஸ்டன்சுரங்கம் அமைக்கலாம் என்று, மத்திய அரசுக்குக் குறிப்பு அனுப்பி, சுரங்க ஒப்பந்தம் வழங்கப்படும் வரையில், எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருந்து விட்டு, பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததும், தாங்களும் எதிர்ப்பு தெரிவிப்பது போல நாடகமாடியது.

மத்திய சுரங்கத்துறை அமைச்சர் கிஷன்ரெட்டி சுரங்கம் அமைக்கும் பணிகளை நிறுத்தி வைப்பதாக அறிவித்து, தமிழக அரசு மேற்கொண்டு டங்ஸ்டன் சுரங்க ஒப்பந்தங்களைப் பரிசீலிக்கக் கூடாது என்று தெரிவித்த பின்னர், திமுக அரசு அது குறித்து அரிட்டாப்பட்டி விவசாயிகளுக்கு எந்த உறுதியும் அளிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

தற்போது அமைதியானமுறையில் போராட்டம் நடத்தும் விவசாயிகளைத் தடுத்து நிறுத்த முற்படுவது, டங்ஸ்டன் சுரங்கத்தைக் கைவிடும் எண்ணம் திமுகவுக்கு இல்லை என்பதையே காட்டுகிறது.

விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் கோரிக்கைகளைப் பரிசீலிப்பது திமுக அரசின் கடமை. அதை விடுத்து, மத்திய அமைச்சர் அறிவிப்பு வெளியிட்ட பிறகும், டங்ஸ்டன் சுரங்கம் தொடர்பாக எந்த உறுதியும் அளிக்காமல், நாட்களைக் கடத்தி விட்டு, தற்போது விவசாயிகள்போராட்டத்திற்குக் காரணமாக இருக்கிறது திமுக.

உடனடியாக விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும், விவசாயிகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் திமுக அரசை வலியுறுத்துகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# ஆர்ப்பாட்டம் நடத்த தி.மு.க.வுக்கு மட்டும் இரவோடு இரவாக அனுமதி அளித்தது எப்படி? அதிமுக



சென்னை, ஜன.9

அ.தி.மு.க.வின் வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஐ.எஸ்.இன்பதுரை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது,

எதிர்க்கட்சிகளின் போராட்டங்களுக்கு அனுமதி மறுக்கும் தமிழக போலீஸ், கவர்னருக்கு எதிராக மேடை, மைக் செட்டுடன் ஆர்ப்பாட்டம் நடத்த தி.மு.க.வுக்கு மட்டும் இரவோடு இரவாக அனுமதி அளித்தது எப்படி? காவல்துறை சட்டத்தின்படி 5 நாட்களுக்கு முன்அனுமதி பெறவேண்டும் என்ற விதியெல்லாம் திமுகவுக்கு கிடையாதா? என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

# பாமகவுக்கு ஒரு நீதி, திமுகவுக்கு ஒரு நீதியா? காவல்துறை திமுகவின் ஏவல்துறையாக மாறிவிடக் கூடாது! அன்புமணி

சென்னை, ஜன.9

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுளள் பதிவில்,

தமிழ்நாட்டில் கவர்னரைக் கண்டித்து திமுக சார்பில் இன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. பொது நலனைப் பற்றிக் கவலைப்படாமல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்த போராட்டத்தால் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் உள்ளிட்டபல்வேறுவகையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இவை அனைத்துக்கும் தமிழக காவல்துறை மவுன சாட்சியாக இருந்து வேடிக்கைப் பார்த்திருக்கிறது.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு வேகமாக சீர்குலைந்து வருகிறது, பெண்களால் அச்சமின்றி நடமாட முடியவில்லை, அண்ணா பல்கலைக்கழகத்திற்குள் அத்துமீறி நுழைந்த திமுகவின் ஆதரவு பெற்ற மனித மிருகம் ஒன்று அங்கு பயிலும் மாணவியை பாலியல் வன்கொடுமை செய்திருக்கிறது. அந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி பெற்றுத் தர வேண்டிய காவல்துறை, குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சியில் தான் ஈடுபட்டது. அதைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியும் கடந்த 2ஆம் தேதி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பாட்டாளி மகளிர் சங்கம் சார்பில் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கான அனுமதி கோரி 4 நாட்களுக்கு முன்பாக விண்ணப்பமும் செய்யப்பட்டிருந்தது.

ஆனால், சென்னை பெருநகர காவல்துறை சட்ட விதி 41இன் படி ஐந்து நாட்களுக்கு முன்பாக விண்ணப்பித்தால் மட்டும் தான் அனுமதி வழங்க முடியும் என்று கூறி காவல்துறை அனுமதி மறுத்து விட்டது. அதுமட்டுமின்றி, வள்ளுவர்கோட்டத்தில் 500க்கும் கூடுதலான காவலர்களைக் குவித்து போராட்டக்களத்திற்கு எவரும் வராமல் தடுத்தது. போராட்டத்திற்கு தலைமையேற்க வந்த பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி அவர்களை மகிழுந்தை விட்டுக் கூட இறங்க விடாமல் கைது செய்து அழைத்துச் சென்றது. பா.ம.க. போராட்டத்தின் போது கோர முகத்தைக் காட்டிய காவல்துறை, இப்போது அடிமை முகத்தைக் காட்டியிருக்கிறது.

கவர்னரைக் கண்டித்து போராட்டம் நடத்தப் போவதாக நேற்று பிற்பகல் 2.48 மணிக்கு தான் திமுக அறிவித்தது. அதன் பின்னர் நேற்று முன்னிரவில் தான் போராட்டத்திற்கு அனுமதி கோரி திமுக சார்பில் விண்ணப்பிக்கப்பட்டதாககூறப்படுகிறது. அதை யேற்றுக் கொண்டு அடுத்த சில நிமிடங்களில் அனுமதி அளிக்கப்பட்டதாக தெரிகிறது. திமுகவினரின் போராட்டங்களின் போது பல இடங்களில் விதிமீறல்கள் நடந்தாலும் கூட அதற்காக எவரும் கைது செய்யப்படவில்லை. தமிழககாவல்துறையின் இந்த அப்பட்டமான இரட்டை வேடம் கடுமையாக கண்டிக்கத்தக்கது. திமுகவினரின் போராட்டத்திற்கு சட்டவிரோதமாக அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில் எவரேனும் நீதிமன்றத்திற்கு செல்வார்களோ, நீதிமன்றம் தடை விதித்து விடுமோ? என்ற அச்சத்தில், அறிவிக்கப்பட்ட நேரமாககாலை 10.00மணிக்கு பதிலாக காலை 9.00 மணிக்கே சென்னைசைதாப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. அதனால் கல்லூரிகளுக்கும், அரசு அலுவலகங்களுக்கும் செல்பவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.


பாட்டாளி மக்கள் கட்சியின் போராட்டத்திற்கு அனுமதி கோரி 5 நாட்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும் என்பதற்கு என்னென்ன நியாயங்கள்உள்ளனவோ, அந்த நியாயங்கள் அனைத்தும் திமுகவின் போராட்டங்களுக்கும் உண்டு. ஆனால், பாமக போராட்டத்திற்கு அனுமதி மறுத்த காவல்துறை, திமுக போராட்டத்திற்கு மட்டும் அனுமதி வழங்கியது ஏன்? ஆட்சியாளர்கள் என்றால் வானத்திலிருந்து குதித்தவர்களா? அவர்களுக்கு மட்டும் அஞ்சி நடுங்கி அனுமதிதரவேண்டுமா? என்றெல்லாம் மக்கள் வினா எழுப்புகிறார்கள். அவற்றுக்கு காவல்துறையும், தமிழக அரசும் பதிலளிக்க வேண்டும்.

காவல்துறை என்பது மக்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது. அது பாமகவுக்கு காவல்துறை என்றால், திமுகவுக்கும் காவல்துறையாகத் தான் இருக்க வேண்டும். தமிழக காவல்துறை திமுகவின் ஏவல்துறையாக மாறிவிடக் கூடாது. பாமகவுக்கு ஒரு நீதியையும், திமுகவுக்கு ஒரு நீதியையும் காவல்துறை கடைபிடிக்கக்கூடாது. திமுக அரசின் அதிகாரக் கரங்களுக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் காவல்துறை எப்படியெல்லாம் ஆட்டுவிக்கப்படுகிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்கள் சரியான நேரத்தில், சரியான முறையில் பாடம் புகட்டுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# பொங்கல் பண்டிகையையொட்டி ஈரோடு ஜவுளிச்சந்தையில் விடிய விடிய நடந்த விற்பனை

ஈரோடு, ஜன.9

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் கனி மார்க்கெட் ஜவுளி வணிக வளாகம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளான மணிக்கூண்டு ரோடு, டி.வி.எஸ். வீதி, ஈஸ்வரன் கோவில் வீதி, என்.எம்.எஸ்.காம்பவுண்ட், காமராஜர் வீதி, பிருந்தாவீதி உள்ளிட்ட பகுதிகளில் ஜவுளி மொத்தம் மற்றும் சில்லறை விற்பனை நடைபெற்று வருகிறது.



இங்கு வாரந்தோறும் திங்கள்கிழமை இரவு தொடங்கி செவ்வாய்க்கிழமை இரவு வரை ஜவுளி வார சந்தை நடைபெற்று வருகிறது. இந்த ஜவுளி வாரச்சந்தை தென்னிந்திய அளவில் மிகவும் புகழ் பெற்றது. இங்கு மகாராஷ்டிரா ஆந்திரா தெலுங்கானா கர்நாடகா கேரளா போன்ற மாநிலங்களில் இருந்துநூற்றுக்கணக்கான வெளி மாநில வியாபாரிகளும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான வியாபாரிகள் வந்து துணிகளை கொள்முதல் செய்வார்கள்.

இந்த நிலையில் இந்த வார ஜவுளிச்சந்தை நேற்று இரவு தொடங்கியது. கடந்த வாரங்களில் கிறிஸ்துமஸ் விழா மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு ஜவுளி விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. தொடர்ந்து தற்போது பொங்கல் பண்டிகைக்கு இன்னும் ஒருவாரகாலமே உள்ள நிலையில், இதற்கான ஜவுளி விற்பனை இந்த வாரமும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

இதில் ஆண்கள், பெண்கள் குழந்தைகளுக்கான புதிய ரக ஆடைகள், ஜீன்ஸ் பேண்ட், வேட்டி, பனியன் ரகங்கள், உள்ளாடைகள் மற்றும் புடவை, சுடிதார், குர்தீஸ் உள்ளிட்ட துணி ரகங்கள் அதிக அளவில் விற்பனையாகின. மேலும், குளிர் காலத்துக்கான சால்வை, பெட்ஷீட், கம்பளி ரகங்களும் அதிக அ ள வி ல் விற்பனையாகின.

அடுத்தவாரம் வர உள்ள பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்த வாரஜவுளிச்சந்தையில் மொத்த மற்றும் சில்லறை விற்பனை அதிக அளவில் நடைபெற்றதாக ஜவுளி வியாபாரிகள் தெரிவித்தனர். மேலும் கேரளா, தெலுங்கானா மாநிலத்தில் இருந்து அதிகளவில் வெளி மாநில வியாபாரிகள் வந்து குவிந்ததால் விடிய விடிய ஜவுளி விற்பனை விறு விறுப்பாக நடைபெற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# பெங்களூருவில் எச்.எம்.பி.வி. தொற்று: தமிழக எல்லையில் கண்காணிப்புகள் தீவிரம்

ஓசூர், ஜன.9

சீனாவில் கண்டறியப்பட்டுள்ள எச்.எம்.பி.வி. என்ற நுரையீரலை பாதிக்கும் புது வகையான வைரஸ் தொற்று, கர்நாடகா மாநிலம், பெங்களூருவை சேர்ந்த, 8 மாதம், 3 மாத குழந்தை என இருவருக்கு இருப்பது நேற்று கண்டறியப்பட்டுள்ளது.




அந்த குழந்தைகளுக்கு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. எச்.எம்.பி.வி., வைரஸ் தொற்று, ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு பரவக்கூடிய வாய்ப்பு உள்ளது.

கர்நாடகா மாநிலம் பெங்களூருக்கு மிக அருகாமையிலுள்ள, தமிழக எல்லையான ஓசூரை சேர்ந்த மக்கள் பல ஆயிரம் பேர், பல்வேறு தேவைகளுக்காக தினமும் பெங்களூருசென்றுவருகின்றனர்.

இந்நிலையில், பெங்களூருவில் எச்.எம்.பி.வி., வைரஸ் தொற்று இருப்பது உறுதியாகி உள்ளதால், தமிழக எல்லையை உஷார்படுத்தி, ஓசூர் மாநகராட்சி நிர்வாகம், நோய் தொற்று தடுப்பு பணிகளை மேற்கொள்ள கோரிக்கை எழுந்துள்ளது.

இது குறித்து, ஓசூர், மாநகர நல அலுவலர் அஜிதா கூறுகையில், ஓசூரில், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், காய்ச்சல் அறிகுறியுடன் அனுமதிக்கப்படுபவர்கள் மற்றும் காய்ச்சலுக்கு வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்று செல்வோர் குறித்த விபரங்கள் பெறப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இதுவரை ஓசூரில், எந்த பாதிப்பும் கண்டறியப்படவில்லை என்றார்.

# நாட்கள் எண்ணப்படுவதை தி.மு.க. அரசு உணர்ந்துள்ளது: வானதி சீனிவாசன்

சென்னை, ஜன.9

சென்னையில் பா.ஜ.க. எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

எங்கெங்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கெல்லாம் ஆளுநரை அவமானப்படுத்த வேண்டும் என்று தி.மு.க. நினைக்கிறது. அதுமட்டுமல்ல எப்படியாவது அவரை அச்சுறுத்தி அவருடைய செயல்பாடுகளில் இருந்துபின்வாங்கவைக்க வேண்டும் என மறைமுகமாக ஒரு அழுத்தத்திற்காக இந்த மாதிரி வேலைகளை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இந்த on twitst practice என்பது தி.மு.க.விற்கு புதிதல்ல.

கருத்து சுதந்திரம் அல்லது அரசியலமைப்பு சட்டத்திற்கான மரியாதை என்பதில் எல்லாம் எந்த நம்பிக்கையும் இல்லாத தி.மு.க. அரசு இப்படி தான் நடந்துகொள்ளும்.

இங்கு அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினால் கூட அது கூட்டணி கட்சிகளாக இருந்தாலும் கூட சமீப காலங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது.

சட்டசபைக்குள் உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் அல்லது அவர்கள் காட்டுகின்ற எதிர்ப்பை கூட லைவ்வை கட் செய்கிறார்கள். மீடியாக்கள் போடக்கூடாது என்று சொல்கிறார்கள்.

எமர்ஜென்சி காலத்திற்கு திரும்பவும் மக்களை தி.மு.க. அரசு எடுத்துக்கொண்டு செல்கிறது.

போஸ்டர், ஆர்ப்பாட்டம் எல்லாம் கவர்னருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இல்லை. இவர்கள் தேசிய கீதம், அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரான நடத்துகிற போராட்டமாகத் தான்மக்கள்பார்ப்பார்கள்.

மரியாதைக்குரிய கவர்னரை வரவழைத்து, அவர் என்ன கேட்டார். தேசிய கீதம் பாட வேண்டும் என்று சொன்னார்.

தேசிய கீதம் தமிழக சட்டசபைக்கு மட்டும் அவர் கேட்டாரா? தி.மு.க. கூட்டணியில் இருக்கின்ற மற்றமாநிலத்தில்பா.ஜ.க. அல்லாத அரசாங்கங்கள் இருக்கிறது.

கவர்னர் வருகை தரும் போதும், அவர் நிகழ்ச்சி முடிந்துசெல்லும்போதும் தேசிய கீதம் இசைக்கப்படுவது என்பது மரபு. அதனால் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று கேட்கிறார். இதை ஏன் மறுக்க வேண்டும்.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடக்கூடாது என்று கவர்னர் சொல்லவில்லை. அதையும் பாடுவோம். ஆனால் தேசிய கீதத்தை பாடுவதில் இவர்களுக்கு ஏன் இவ்வளவு தூரம் எரிச்சல் வருகிறது என்று தெரியவில்லை.

தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவது மரபு என்பது முதன்முதலில் தி.மு.க. அரசு வரும்போது கூட இங்கு கொண்டுவரவில்லை. அதற்கு பின்னால் இருந்து தான் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்படுகிறது. பெருமை கொள்கிறோம். தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடணும். தேசிய கீதமும் பாடணும் இதுதான் நாங்கள் எதிர்பார்ப்பது.




ஆனால் கவர்னரை அவமானப்படுத்த வேண்டும். கவர்னர் சொன்னால் நாம ஏன் கேட்கணும் அப்படி நினைக்கிற தி.மு.க. அரசு இந்த பிரச்சனையை பெரிதாக்குகிறது.

அண்ணா பல்கலை. பிரச்சனை, பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள், பல்வேறு இடங்களில் சட்டம் ஒழுங்கு பாதிப்புக்குள்ளாகி இருக்கும் சூழல், இந்த அரசு இந்தியாவிலேயே அதிகமாக கடன் வாங்குகின்ற அரசாக இருப்பது இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி பேசுவதற்காக சட்டசபையில் கூடுகிறபோது, அந்த கவனத்தை எல்லாம் திசை திருப்பவே கவர்னருடன் மோதல் போக்கை கையாண்டு, அதை மட்டுமே மக்களை பேசவைக்கிறார்கள்.

மக்களின் பிரச்சனைகளை திசை திருப்பவே வேண்டுமென்றே தி.மு.க. அரசு சட்டசபை நிகழ்வுகளை சாக்காக வைத்துக்கொண்டு செய்கின்ற முயற்சியாகத்தான் நாங்கள் பார்க்கிறோம்.

தொழில்நுட்ப கோளாறை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் சட்டசபையில் பேசினால் கூட முழுமையாக வராது. அதை அவர்கள் கட் செய்து, வெட்டி ஒட்டி வெளியே வரும்.

நேற்று உங்களுக்கு லைவ் கொடுக்கவில்லை. கேட்டால் தொழில்நுட்பக்கோளாறு. எதிர்க்கட்சிகள் ஆளும்கட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும்போது எல்லாம் தொழில்நுட்பக்கோளாறு வந்துவிடும்.

திராவிட மாடல் அரசில் நன்றி சொல்லி பாராட்டினால் அனுமதிப்போம். எதிராக பேசினால் தொழில்நுட்பக்கோளாறு வந்துவிடும். உடனே ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி வந்துவிடும்.

நாட்கள் செல்ல செல்ல தங்களுடைய நாட்கள் எண்ணப்பட்டு வருகிறது என்பதை தி.மு.க. அரசு உணர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் மக்கள் பிரச்சனைகளை யார் பேசினாலும் பதட்டம் அடைகிறார்கள்.

மாணவி கருப்பு துப்பட்டா போட்டால் கூட அரசாங்கம் பயப்படுகிறது. அவர்களுக்கு தெரிகிறது தமிழக மக்கள் எந்த அளவிற்கு அவர்கள் மீது கோபமாக இருக்கிறார்கள் என்று உணர்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்று கூறினார்.

# நாவை அடக்குங்கள், நடத்தையை சரி செய்து கொள்ளுங்கள் ஆளுநருக்கு கனிமொழி அட்வைஸ்

சென்னை, ஜன.9

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநர் ஆர்.என். ரவியை கண்டித்தும், ஆளுநரை திரும்ப பெற வலியுறுத்தியும் இன்று அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறது.




சென்னை சைதாப்பேட்டையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் கனிமொழி, தயாநிதி மாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது எம்.பி. கனிமொழி கூறியதாவது:

★ சட்டசபையில் உரையாற்றாமல் சென்றதை குழந்தை போல் காரணம் சொல்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

★ தமிழக சட்டசபையில் 3வது முறையாக உரையாற்றாமல் ஹாட்ட்ரிக் அடித்துள்ளார் ஆளுநர்.

★ வீட்டிலிருந்து விடுமுறை கடிதம் எழுதுங்கள். அதை முதல்வர் அனுமதிப்பார்.

★ உங்களுக்கும் விடுதலைக்கும் என்ன சம்பந்தம்.

★ நாட்டின் அரசியலமைப்பை, நாட்டு மக்களை காப்பாற்றும் எங்களுக்குபாடம்கற்றுத்தரும் நிலையில் நீங்கள் இல்லை.

★ தமிழகத்தில் ஆர்.என்.ரவி ஆளுநராக இருந்தால் பா.ஜ.க.வின் ஓட்டு சதவீதம் கண்டிப்பாக சரியும்.

★ கடைசியில் தமிழகத்தில் பா.ஜ.க. ஒரு ஓட்டு கூட வாங்க முடியாத நிலை வரும் என்பதால் தான் ஆளுநரை திரும்ப பெற கூறுகிறோம்.

★ தமிழ்நாட்டிற்கு நீங்கள் வேண்டாம் என உங்களின் நலனுக்காகவே சொல்கிறோம்.

★ ஆளுநர் அரசியல் பேச வேண்டிய தேவையோ அவசியமோ இல்லை.

★ நாவை அடக்குங்கள், உங்கள் நடத்தையை சரி செய்து கொள்ளுங்கள்.

★ தமிழகத்தை மதிக்காவிடில் ஓடஓட விரட்டப்படுவீர்கள். அந்த நாள் வெகுவிரைவில் உள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

# வீட்டிலேயே சாராயம் காய்ச்சி விற்றவர் கைது 20 லிட்டர் சாராயம் பறிமுதல்

கூடலூர், ஜன.9

கூடலூர் அருகே ஒரு வீட்டிலேயே சாராயம் காய்ச்சி விற்பனை செய்யப்படுவதாக உத்தமபாளையம் மதுவிலக்கு இன்ஸ்பெக்டர் சூரிய திலகராணிக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து உத்தமபாளையம் டி.எஸ்.பி. செங்குட்டுவேலவன் தலைமையில் போலீசார் கருநாக்கமுத்தன்பட்டியில் அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது சந்தேகத்திற்கு இடமாக ஒரு வீட்டில் இருந்து அதிக நபர்கள் வந்த வண்ணம் இருந்ததால் 2வது வார்டு பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த ராஜா (வயது 55) என்பவரது வீட்டிற்குள் புகுந்து சோதனை நடத்தினர்.

அப்போது ராஜா தனது வீட்டிலேயே சாராயம் காய்ச்சி விற்பனை செய்து வந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ராஜாவை கைது செய்த போலீசார் அவர் விற்பனைக்காக குடத்தில் வைத்திருந்த 20 லிட்டர் சாராயத்தையும் பறிமுதல் செய்தனர்.

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு கூடலூர் அருகில் உள்ள குள்ளப்ப கவுண்டன்பட்டியில் தோட்டத்தில் சாராயம் காய்ச்சி விற்பனை செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து அங்கு சென்ற போலீசார் 100 லிட்டர் சாராயத்தை பறிமுதல் செய்தனர்.

தற்போது மீண்டும் மக்கள் வசிக்கும் பகுதியிலேயே சாராயம் விற்பனை செய்யப்பட்டு வந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தேனி மாவட்டத்தில் அனுமதியில்லாமல் மதுபான விற்பனை தாராளமாக நடைபெற்று வருகிறது. மேலும் வெளி மாநிலங்களில் இருந்து கஞ்சா பதுக்கி வைத்து விற்கப்படுகிறது. இதனிடையே சாராயம் விற்பனையும் அதிகரித்து வருவதுபரபரப்பைஏற்படுத்தி உள்ளது.

# துணைவேந்தர் தேடுதல் குழுவை கவர்னரே நியமிப்பார் யுஜிசி புதிய விதியில் தகவல்

சென்னை, ஜன.9

பல்கலைக்கழகங்களில் துணை வேந்தரை நியமிப்பது தொடர்பாக தமிழக அரசுக்கும், கவர்னர் ஆர்.என்.ரவிக்கும் இடையே மோதல் போக்கு ஏற்பட்டு வருகிறது.




பல்கலைக்கழகங்களின் துணைவேந்தரை தேர்வு செய்வதற்கான தேடுதல் குழுவில், பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், தமிழக அரசின் பிரதிநிதி ஒருவர் மற்றும் கவர்னர் தரப்பில் ஒருவர் இடம்பெறுவர். இந்தக் குழு விண்ணப்பங்களை பரிசீலித்து, தகுதியான 3 பேரின் பெயர்களை கவர்னருக்கு பரிந்துரைக்கும். அதில் ஒருவரை கவர்னர் நியமிப்பது வழக்கம்.

இந்தச் சூழலில், துணை வேந்தர் தேடுதல் குழுவில் பல்கலைக்கழக மானிய குழு (யுஜிசி) பிரதிநிதி ஒருவரை சேர்க்க வேண்டும் என்று கவர்னர் ரவி ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருந்தார்.

ஆனால், துணைவேந்தர் நியமனத்தில், யுஜிசியின் விதிகளை பின்பற்ற வேண்டும் என்பது கட்டாயம். தேடுதல் குழுவில் யுஜிசியின் பிரதிநிதி ஒருவர் சேர்க்கப்பட வேண்டும் என்பது கட்டாயமில்லை என்று தமிழக அரசு தெரிவித்தது.

இந்த நிலையில், பல்கலைக்கழக துணைவேந்தர் நியமன தேடுதல் குழுவை வேந்தரான கவர்னரே முடிவு செய்வார் என்று யுஜிசி வெளியிட்டுள்ள புதிய விதிகளின் வரைவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த புதிய விதியில், தலைவராக கவர்னர் பரிந்துரைப்பவரும், உறுப்பினராக யுஜிசி பரிந்துரைப்பவரும் இருப்பார்கள். மற்றொரு உறுப்பினராக பல்கலைக்கழக உறுப்பினர் பரிந்துரைப்பவர் இருப்பார் என்று கூறப்பட்டுள்ளது.

இதனால் இந்த புதிய விதிமுறையால் மாநில அரசு பரிந்துரைக்கும் உறுப்பினர் இனி இடம் பெற முடியாது என்பது உறுதியாகி உள்ளது.

# திருப்பரங்குன்றம் மலை தர்காவில் தொழுகை நடத்த அனுமதி மறுப்பா? தமிழக அரசு விளக்கம்




சென்னை, ஜன.9

மதுரை திருப்பரங்குன்றம் மலை உச்சியில் அமைந்துள்ள தர்காவில் முஸ்லிம்கள் தொழுகைநடத்தபோலீஸ் அனுமதி மறுத்ததாக செய்தி வெளியாகியுள்ளது. இதற்கு தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது.

அதில், "இது முற்றிலும் பொய்யான செய்தி. திருப்பரங்குன்றம் சுல்தான் சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்காவில் ஆடுகளை பலி கொடுப்பது தொடர்பாக நீதிமன்றத்தின் மூலமாக தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் தர்காவில் வழிபாடு செய்ய போலீஸ் மற்றும் வருவாய்த்துறையினர் தடை விதித்துள்ளதாக பொய் பிரசாரம் செய்து வருகின்றனர். அங்கு முஸ்லிம்கள் வழக்கம்போல் வழிபாடுகளை மேற்கொள்ள எந்த வித தடைகளும் விதிக்கப்படவில்லை என்று திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் விளக்கம் அளித்துள்ளார்" என்று கூறப்பட்டுள்ளது.

*7 ஜனவரி 2025 9:15 AM (Updated: 7 ஜனவரி 2025 2:40 PM)*

இன்றைய முக்கியச் செய்திகள்.

இன்றைய அரசியல், சினிமா, விளையாட்டு செய்திகளை ஒரு சில வரிகளில் பெறுங்கள்.

தமிழகஅரசியல், பொது நிகழ்வுகள், தேசிய அரசியல், விளையாட்டு மற்றும் உலக நடப்புகள் குறித்த அனைத்து செய்திகளையும் ஒரே பதிவில் அறிந்து கொள்ளுங்கள்..

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நல்லம்பள்ளி வாரச்சந்தையில் ரூ.1 கோடிக்கு ஆடுகள் விற்பனை



தருமபுரி, ஜன.9

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமைகளில் சந்தை நடைபெற்று வருகிறது.

மிகவும் பிரசித்தி பெற்ற இந்த வாரச்சந்தைக்கு சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மேட்டூர் மேச்சேரி மற்றும் ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆடுகளை வாங்கவும், விற்கவும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வந்து செல்கிறார்கள். செவ்வாய்கிழமைகளில் நடக்கும் சந்தையில் அதிகாலை நேரத்தில் ஆடுகள் விற்பனை தொடங்கி காலை நேரத்திலேயே அனைத்து ஆடுகளும் விற்பனை ஆகிவிடும். இந்தநிலையில் பொங்கல் பண்டிகை இன்னும் ஐந்து நாட்களே உள்ள நிலையில் ஆடுகளுக்கான தேவை அதிகரித்துள்ளது.

இன்று அதிகாலை நல்லம்பள்ளியில் ஆட்டு சந்தை தொடங்கியது. பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகளுடன் இந்த சந்தையில் குவிந்தனர். இதேபோல் ஆடுகளை வாங்கவும் ஏராளமான வியாபாரிகள் சந்தையில் திரண்டனர். வியாபாரிகள் மற்றும் வீடுகளில் ஆடுகளை வளர்த்தவர்கள் என அனைவரும் விற்பனைக்காக ஆடுகளை அதிக அளவில் கொண்டு வந்திருந்தனர்.

ஆடுகள் எடைக்கேற்ப ரூ.5 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை விற்பனையானது. சுமார் ரூ.1 கோடி வரை ஆடுகள் விற்பனை நடைபெற்றது. பண்டிகைக்கு ஆடுகள் விற்பனை சந்தையில் களை கட்டியது. அதிகாலையில் கடும் பனிப்பொழிவிலும் விறுவிறுப்பான விற்பனை நடைபெற்றது.

# பொங்கல் பண்டிகை: நெல்லையில் களைகட்டும் பனை ஓலை விற்பனை



நெல்லை, ஜன.9

தமிழர்திருநாளாம் பொங்கல் பண்டிகை வருகிற 14ந் தேதி (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகை என்றாலே வாசல் முற்றத்தில் சூரிய பகவானுக்கு உணவு தானியங்களை படைத்து, அடுப்புக்கூட்டி மண்பானையில் அரிசி இட்டு, பனை ஓலைகளை எரித்து பொங்கல் வைப்பது வழிவழி வந்த மரபாகும். பொங்கல் பண்டிகைக்கு இன்னமும் 6 தினங்களே உள்ள நிலையில், நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் பொங்கல் இடுவதற்கான பனை ஓலைகள் விற்பனை களைகட்டி வருகிறது.

பனைமரங்களில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட பனை ஓலைகளை காய வைத்து, பனை தொழிலாளர்கள் முக்கிய இடங்களில் விற்பனை செய்து வருகின்றனர். நெல்லை மாவட்டத்தில் சீவலப்பேரி, செய்துங்கநல்லூர், திசையன்விளை, இட்டமொழி, முனைஞ்சிப்பட்டி ஆகிய பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட பனை ஓலைகள் தற்போது நெல்லை சந்திப்பு வண்ணார்பேட்டை, பாளையங்கோட்டை மார்க்கெட் பகுதிகள், டவுன் ரதவீதிகள், பாளையங்கோட்டை கோபால சுவாமி கோவில் சுற்றுவட்டார பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஒரு தனி ஓலை ரூ.30க்கும், 5 ஓலைகள் சேர்த்து ரூ.120க்கும் விற்கப்பட்டு வருகின்றன.

அதேபோல, தென்காசி மாவட்டத்தில் தென்காசி அய்யாபுரம், நாலாங்குறிச்சி, கரும்புளியூத்து, மருதமுத்தூர், கடையாலுருட்டி, சேர்ந்தமரம், கோதண்டராமபுரம், வேலப்பநாடானூர் உள்ளிட்ட இடங்களில் பனை மரங்களில் இருந்து வெட்டி எடுத்து கொண்டு வரப்படும் பனை ஓலைகள் நெல்லை மாநகர் மற்றும் சுற்றுவட்டாரங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பனை ஓலை வியாபாரிகள் கூறுகையில், "சாதாரண நாட்களில் விவசாய கூலி வேலைக்கு செல்லும் நாங்கள், பொங்கல் பண்டிகை காலத்தில் மட்டும் பனை ஓலைகளை வெட்டி வந்து நகர்புறங்களில் விற்பனை செய்வோம். கடந்தாண்டு ஒரு ஓலை ரூ.20க்கு விற்றோம். பனை மரத்தில் ஏறி இறங்க போதிய நபர்கள் இல்லை. எனவே கிராமங்களில் கிடைக்கிற ஓலைகளை வெட்டி வந்து ரூ.30க்கு விற்பனை செய்கிறோம். நெல்லை மாவட்டத்தில் தற்போது வீசி வரும் குளிர் காற்றில் பனை ஓலைகளை காய வைப்பது கஷ்டமாக உள்ளது" என்றனர்.

நெல்லை மாநகர பகுதிகளில் தற்போது பொங்கல் பண்டிகைக்காக மண் அடுப்புகளும் விற்பனைக்கு வந்துள்ளன. பாளையங்கோட்டை சுற்றுவட்டாரங்களில் பெரிய அடுப்பு ரூ.150க்கும், சிறிய அடுப்பு எனில் ரூ.100க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பொங்கல் பண்டிகைக்கு பொருட்கள் வாங்க வருவோர் பனை ஓலைகளோடு, மண் அடுப்புகளையும் சேர்த்து கொள்முதல் செய்து கொண்டு செல்கின்றனர்.

# மின்சாரம் தாக்கி பெண் பலி எலுமிச்சை பழம் பறிக்க முயன்றபோது சோகம்



திருவள்ளூர், ஜன.9

திருவள்ளூர்மாவட்டம் வரதாபுரம் கிராமத்தை சேர்ந்தவர் லோகேஸ்வரி (26). இவருக்கும் திருமணமாகி சந்தோஷ் என்ற கணவர் உள்ளார்.

இந்நிலையில், லோகேஸ்வரின் நேற்று தனது வீட்டில் உள்ள எலுமிச்சை மரத்தில் எலுமிச்சை பழம் பறிக்க முயன்றுள்ளார். வீட்டின் மாடியில் ஏறி இரும்பு கம்பியை கொண்டு எலுமிச்சை பழத்தை பறிக்க முயன்றார். அப்போது, வீட்டின் மாடிக்கு அருகே சென்ற மின்சார கம்பி மீது லோகேஸ்வரி கையில் வைத்திருந்த இரும்பு கம்பி பட்டது.

இதில், படுகாயமடைந்த லோகேஸ்வரியை அக்கம் பக்கத்தினர் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே லோகேஸ்வரி உயிரிழந்தார்..

அதேவேளை, தாழ்வாக சென்ற மின் கம்பியை அகற்றக்கோரி பலமுறை புகார் அளித்தும் மின்வாரியம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதனால், உயிரிழப்பு ஏற்பட்டதாக குற்றஞ்சாட்டி லோகேஸ்வரியின் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியில் சற்று நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குளிர்காய நெருப்பு மூட்டியபோது பரிதாபம்: தீயில் கருகி மூதாட்டி உயிரிழப்பு

தேனி, ஜன.9


தேனி அருகே வடபுதுப்பட்டி பகுதியில் ஒரு ஆதரவற்றோர் காப்பகம் உள்ளது. அங்கு மனநலம் பாதித்தவர்கள் மற்றும் ஆதரவற்ற முதியோர்கள் சுமார் 60 பேர் உள்ளனர். தேனி பகுதியில் கடந்த சில நாட்களாக பனியின் தாக்கம் அதிகமாக உள்ளது. சம்பவத்தன்று பனியின் தாக்கம் அதிகமாக இருந்ததால், ஆதரவற்றோர் காப்பகத்தில் இருந்தவர்கள் காப்பகம் முன்பு காய்ந்த இலைகளை குவித்து நெருப்பு வைத்து குளிர் காய்ந்து கொண்டிருந்தனர். அதேபோல் அங்கு தங்கியிருந்த ஆதரவற்ற மூதாட்டியான அக்கம்மாள் (வயது 64) என்பவரும் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக அக்கம்மாள் அணிந்திருந்த துணியில் தீப்பற்றியது. இந்த தீ மளமளவென அவரது உடல் முழுவதும் பரவியது. இதனால் அவர் அலறி துடித்தார். உடனே அருகில் இருந்தவர்கள், அக்கம்மாள் மீது பற்றி எரிந்த தீயை அணைத்தனர். இருப்பினும் அவர் பலத்த தீக்காயம் அடைந்தார். இதையடுத்து அவர் சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி அக்கம்மாள் உயிரிழந்தார். இது குறித்து விடுதி காப்பாளர் சிசிலி அல்லிநகரம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆசிய கண்டத்திற்கு வெளியே ஆடிய முதல் டெஸ்ட் தொடரிலேயே வெற்றி.. வரலாறு படைத்த ஆப்கானிஸ்தான்




ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி, ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் போட்டி டிரா ஆன நிலையில், 2வது மற்றும் கடைசி டெஸ்ட் புலவாயோவில் கடந்த 2ந்தேதி தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் ஆப்கானிஸ்தான் 157 ரன்னும், ஜிம்பாப்வே 243 ரன்னும் எடுத்தன. 86 ரன் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை ஆடிய ஆப்கானிஸ்தான் 363 ரன்களில் ஆட்டமிழந்தது. இதன் மூலம் ஜிம்பாப்வே அணிக்கு 278 ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. இலக்கை நோக்கி களமிறங்கிய ஜிம்பாப்வே அணி, ரஷித்கானின் சுழற்பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 205 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதனால் ஆப்கானிஸ்தான் 72 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆப்கானிஸ்தான் தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் 7 விக்கெட்டுகளை அள்ளினார். இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி தொடரை 10 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. முதல் டெஸ்ட் டிராவில் முடிந்து இருந்தது. ஒட்டுமொத்தத்தில் 11வது டெஸ்டில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி ருசித்த 4வது வெற்றி இதுவாகும். முன்னதாக ஆசிய கண்டத்துக்கு வெளியே ஆப்கானிஸ்தான் விளையாடிய முதல் டெஸ்ட் தொடர் இதுவாகும். இதன் மூலம் ஆசிய கண்டத்திற்கு வெளியே விளையாடிய முதல் டெஸ்ட் தொடரிலேயே வெற்றி கண்ட முதல் ஆசிய அணி என்ற வரலாற்று சாதனையை ஆப்கானிஸ்தான் படைத்துள்ளது.

# டெஸ்ட் தொடர்: பாகிஸ்தானை ஒயிட்வாஷ் செய்த தென் ஆப்பிரிக்கா



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதல் டெஸ்டில் ஏற்கனவே தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்றிருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் கேப்டவுனில் நடைபெற்றது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 615 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ரையான் ரிக்கெல்டன் 259 ரன்களும், பவுமா 106 ரன்களும், வெர்ரைன் 100 ரன்களும் அடித்தனர்.

இதனையடுத்து முதல் இன்னிங்சை ஆடிய பாகிஸ்தான் 194 ரன்களில் ஆல்அவுட் ஆகி பாலோஆன் ஆனது. அதிகபட்சமாக பாபர் அசாம் 58 ரன்கள் அடிக்க, தென் ஆப்பிரிக்கா தரப்பில் ரபடா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் 421 ரன்கள் பின்தங்கிய நிலையில் தொடர்ந்து 2வது இன்னிங்சை ஆடிய பாகிஸ்தான் அணி 122.1 ஓவர்களில் 478 ரன்கள் குவித்து ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக ஷான் மசூத் 145 ரன்கள் அடித்தார். தென் ஆப்பிரிக்கா தரப்பில் ரபடா, கேஷவ் மகராஜ் தலா 3 விக்கெட்டுகளும், மார்கோ ஜான்சன் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதன் மூலம் தென் ஆப்பிரிக்க அணிக்கு 58 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய தென் ஆப்பிரிக்கா 7.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 61 ரன்கள் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. டேவிட் பெடிங்ஹாம் 47 ரன்களுடனும், மார்க்ரம் 14 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் தென் ஆப்பிரிக்கா தொடரை 20 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி பாகிஸ்தானை ஒயிட்வாஷ் செய்து அசத்தியுள்ளது. ரையான் ரிக்கெல்டன் ஆட்ட நாயகனாகவும், மார்கோ ஜான்சன் தொடர் நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

# சாம்பியன்ஸ் டிராபி தொடர்; வரும் 12ம் தேதிக்குள் அணியை அறிவிக்க வேண்டும் ஐ.சி.சி

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்துவிட்ட நிலையில், இந்திய அணி இங்கிலாந்து அணிக்கு எதிராக டி20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாட இருக்கிறது. இந்தத் தொடரைத் தொடர்ந்து சாம்பியன்ஸ் டிராபி தொடர் நடைபெற இருக்கிறது. இது பிப்ரவரி 19ம் தேதி துவங்கி மார்ச் 9ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தத் தொடர் பாகிஸ்தானில் நடைபெறுகிறது.

இருப்பினும், இந்திய அணி தனது போட்டிகளை துபாயில் விளையாட இருக்கிறது. இந்நிலையில் இந்த தொடரில் இடம் பெற்றுள்ள 8 அணிகளும் தங்களுடைய 15 பேர் கொண்ட அணியை வரும் 123 தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் என தகவல் வெளியாகி உள்ளது. இதில் வீரர்கள் காயம் காரணமாக விலகினால் மாற்றம் செய்து கொள்ளலாம். வீரர்களை மாற்ற பிப்ரவரி 13ந் தேதி வரை அனுமதி உள்ளது. இங்கிலாந்து அணி மட்டுமே இந்த தொடருக்கான அணியை அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# 'சொர்க்கவாசல்' படத்தை ஓ.டி.டி.யில் வெளியிட தடைக்கோரி மனு




பா. ரஞ்சித்தின் உதவி இயக்குனர் சித்தார்த் விஸ்வநாத் இயக்கத்தில் ஆர்.ஜே.பாலாஜி நடிப்பில் கடந்த நவம்பர் மாதம் வெளியான படம் 'சொர்க்கவாசல்'. மத்தியசிறைச்சாலையையமையமாக வைத்து 1999ல் நடக்கும் கதையாக இப்படம் உருவாகியுள்ளது. இதில், செல்வராகவன், கருணாஸ், பாலாஜி சக்திவேல், எழுத்தாளர் சோஷா சக்தி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படம் மக்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது.

இந்த நிலையில், 'சொர்க்கவாசல்' படத்தை ஓ.டி.டி.யில் வெளியிட தடைக்கோரி, மதுரை மாவட்டத்தை சேர்ந்த பரத் என்பவர் ஐகோர்ட்டு மதுரை கிளையில் மனு தாக்கல் செய்துள்ளார். அதாவது, இத்திரைப்படத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றி தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் கருணாஸ் கட்ட பொம்மன் கதாபாத்திரத்தில் மது, போதைப் பொருள் விற்பனை செய்யும் காட்சிகளில் நடித்துள்ளார். இது கட்டபொம்மன் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. சொர்க்கவாசல் திரைப்படத்தை ஓ.டி.டி.யில் வெளியிட தடை விதிக்கவும் தயாரிப்பாளர், இயக்குனர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், ஏ.டிமரிய கிளாட் அமர்வு இது குறித்த திரைப்பட சான்றிதழ் வாரியத்தின் மண்டல அலுவலர் மற்றும் தமிழக திரைப்படத்துறையின் முதன்மை செயலர் ஆகியோர் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர்.

# இளம் இசைக் கலைஞர்களுக்கு பாரத் மேஸ்ட்ரோ விருது ஏ.ஆர்.ரகுமான் அறிவிப்பு




இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் இன்று தனது 58வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இதையொட்டி அவருக்கு அரசியல் கட்சித் தலைவர், ரசிகர்கள், திரைப் பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

கிளாசிக்கல் இசையில் சாதனை படைத்தவர்களை கவுரவிக்க இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் தன்னுடைய கேஎம் இசைக் கன்சர்வேட்டரியுடன் இணைந்து 'பாரத் மேஸ்ட்ரோ விருதுகளை' வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து, ஏ.ஆர் ரகுமான் தெரிவித்திருப்பதாவது, "'பாரத் மேஸ்ட்ரோ விருதுகள்' என்பது ஒரு விருது என்பதையும் தாண்டி, இது கடந்த கால, நிகழ்கால மற்றும் வருங்கால இசையை இணைப்பது குறித்த ஒன்று, நம் அனைவரையும் ஒலி என்ற மொழியால் ஒன்றிணைப்பதாகும். ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்த விருது மூலம், ஒரு சுற்றுச்சூழல் கட்டமைப்பை ஏற்படுத்த தாம் விரும்புவதாகவும், அதில் இசை சார்ந்த ஆழமான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

இளம் தலைமுறை இசைக் கலைஞர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த இசை வித்வான்களுக்கு 'வாழ்நாள் சாதனையாளார் விருது', அதேபோல, இசைத் துறையில் சாதித்து வரும் இளம் தலைமுறை இசைக் கலைஞர்கள் நால்வருக்கு 'இளம் இசைக் கலைஞர்கள் ஸ்டெல்லார் விருதுகள்' என்ற பிரிவில் விருதும் வழங்கப்பட உள்ளது. அத்துடன் பணப் பரிசும் வழங்கப்படவுள்ளது. மேலும், ரகுமானுடன் இணைந்து இசைக் கச்சேரியில் பாடும் வாய்ப்பும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய பாரம்பரியத்தைப் பறைசாற்றும் கிளாசிக்கல் இசையில் திறமையானவர்களை ஊக்கப்படுத்தி பாரம்பரிய இசையை போற்றி வரும் மாநிலத்துக்கு 'இசைப் பங்களிப்புக்கான மாநில விருது' என்ற பிரிவில் விருதும் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது


**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**


Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.